[illegible]

[illegible]

பொழுது தாயையிழந்த கன்றுபோல் பரிதவித்துத் தவிக்கின்றது. இச்சமயத்திலேனும் ஆதரித்து அதை நல்லஸ்திதிக்குக்கொண்டுவரத் தக்கமுயற்சி செய்யாமையால் அப்பாடசாலையினதிகாரிகளுக்கும் அதில்விருப்பம் குறைந்து வருவதுபோற்றோற்றுகின்றது. ஆரியர்களே! நம் குறையைக் கேளுங்கள்; இக்காலத்தில் வடமொழிப் பயிற்சியில் பற்றுண்டாவது மிக அரிது. அஃதுண்டாயினும், சொற்பகாலத்திற்குள் மாறிப்போகின்றது. இதைக்காட்டிலும் தௌர்ப்பாக்கியம் எமக்கு யாதுளது? இப்பொழுதுபாடசாலைக்குச் சரணம் ஒருவருமில்லை. "நீரூழ்கவையினுமவை, கனையேற்றினுமேற்று; இரண்டும் உன்கையிலுளதே,, என்பதுபோல இதை எவ்விதஞ்செய்யவும், அப்பாடசாலையில் படிப்பிக்கத் தற்காலம் வந்திருக்கும் ப்ரம்மஸ்ரீ மார்க்கசகாய சாஸ்திரிகளும், அப்பாடசாலைக்குப்பரமாதிகாரியான செட்டியாரவர்களுமே சக்தர்களென நம்புகிறோம். இவ்விஷயத்தில் விசேஷமாக முயலாவிடில், இப்பாடசாலை என்னும் நங்கை பெரியோர் மனதை வருத்துவாள் போலும். அதுகொண்டே யாமனமுருகி நமது மலைமங்கபணவாளனை வேண்டுவதியாதெனில், பரமான்மா, அப்பாடசாலையைச்சீர்திருத்த அச்செட்டியாரையும், பிள்ளைகளுக்கு நற்பயிற்சியை ஊட்டி முன்னுக்குக்கொண்டுவர இப்பாடசாலை உபாத்தியாயரையும் பிரோபித்துப் பெரியோருள்ளங்களிக்கச் செய்வானென்பதே.

இங்ஙனம்,
சிதம்பரவாசி
வித்தியார்த்தி.

[illegible]

பாலநீதி.

முன்தொடர்பு

௫௬ தெரிந்ததைத்தெளிவுறத் தெரியச்சொல்லும்.
௫௭ தேவனைநம்பித் தேறுதலாயிரு.
௫௮ தைரியம்விட்டால் வைரிமிரட்டும்.
௫௯ தொல்லைவருமுன் துலைக்கவழிபார்.
௬௰ தோன்றினபடிக்குத் துணிந்துசொல்லேல்.
௬௧ நன்றியில்லான் நற்கதியடையான்.
௬௨ நாவுக்கின்பம் நற்குணம்விளம்பல்.
௬௩ நித்தியமோட்சம் நிச்சயமாஞ்சுகம்.
௬௪ நீரிற்றுணிந்து நீந்துதற்கஞ்சு.
௬௫ நுட்பமாய்நூலை உட்புகுந்தறி.
௬௬ நூறுவயசும் நொடியிற்போய்விடும்.
௬௭ நெறிதவறாமல் நிற்பதுநன்மை.
௬௮ நேசன்போல வேஷம்போடேல்.
௬௯ நொடிப்பொழுதாகிலும் நோவுக்கிடங்கொடேல்.
௭௰ நயப்பேசினால் நயக்குறைவுண்டாம்.

ப்ரஹ்மவித்யா.

{ ௩. புத்தகம் }

பத்திர கிரயம்
1 வருஷம் 2—12—0
6 மாஸம் 1—8—0
3 மாஸம் 0—14—0
1 காபி 0—2—6
இலங்கைக்கு, 3—8—0.

{ VOL-3 }

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம்
இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்

{ இலக்கம்-௫ }

பத்திரிகையத்தைமணியார்டராகவாவது, ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு அனுப்புதல் வேண்டும்.

{ NO.5 }

[illegible]

சிதம்பரம்:— ௧௮௮௮ வரு ஆகஸ்டு ௴ ௩௧ உ சர்வதாரி வரு ஆவணி ௴ ௧௭ உ வெள்ளிகிழமை.

[illegible]

சரித்ரப்பயிற்சி.

இங்கிலாந்துதேசத்து உத்தமகவிகளுக்குள் ஒருவரென்று சொல்லக்கூடிய ஷேல்லி யென்னும் ஒருமகாவித்துவான் சரித்திரப் பயிற்சியைப்பற்றி பின்வருமாறு சொல்லுகின்றார். முன் காலத்து விருத்தாந்தங்களை நானறிவேன். அவ்வறிவை நான் நன்னெறியிற் செலுத்துவதற்கு ஒருகவியாகச் செய்துகொள்வேன். இப்படி நானடையும் தெள்ளறிவினாலே என் குற்றங்களெவை? இதற்குமுன்னாலென்னிடத்திலிருந்த அறியாமையாது? என்று ஆராய்ந்தறிந்து சுகமடையப்படுவேன். இக்கவியின் இம்மெய்யான கருத்திற்கிணைய பூர்வகாலத்து கிரேக்கர், ரோமர், ப்ராசீகர், அராபியர் முதலிய ஜாதியர்கள் சரித்திரா ஆராய்ச்சிபுத்தியைத் தெளிவாக்குகிறதென்பதையறிந்து சரித்திரவிஷயமான கெத்தியகாவியங்களை மிகுந்த ஆதரவுடன் விருத்தி செய்தார்களென்பது எல்லோர்க்கும் தெரிந்தவிஷயம். நம்மவர்களோவென்றால் அவ்வாறு சரித்திரஆராய்ச்சி செய்யாததினால் சுவாதீனமற்றவர்களாய் தங்கள் நாட்டின் நன்மையின்பொருட்டு முயற்சி செய்யாமல் ராஜ்யாதிகாரத்தில் விருத்தியடையவில்லையென்பது யாருக்குத்தான தெரியாது? எந்தநாடுகளாயினும் அவைகளின் வாழ்விற்கும் கேட்டிற்கும் காரணம் சரித்திர ஆராய்ச்சியினாலேதானறியக்கூடும். முற்காலத்து வித்துவான்கள் எளியவசனநடையில் நூல்கள் ஒன்றும் செய்யாமல் உத்திரோகமுள்ள கவிரூபமான இதிகாச புராண மகாகாவியம் முதலானவைகளால் நடந்த விருத்தாந்தங்களை ஒருவாறு வர்ணித்தவர்கள். ஆகையால், எளியநடையில் எழுதப்பட்ட முழுதும் நம்பத்தக்க சரித்திர நூல்கள் இப்பாதகண்டத்தில் இல்லை. நம்முடைய துர்ப்பாக்கிய வசத்தால் நம் முன்னோர்களின் பெருமையையும் திறமையையும்பற்றிய மெய்யான விபரங்களை நாம் வாசிக்கக் கொடுத்துவைக்கவில்லை. நம்மவர்களு

[illegible]

ச்குள் இக்காரணத்தினால்தான் தேசாபிமானம விருத்தி யடையவில்லை. "உண்மையின் பொருட்டும் தேச க்ஷேமத்தின் பொருட்டும ஒருவன் மரணமடைவது இனிது" என்று அங்கிலேயர்கள் சொல்லுகிறார்கள். கீர்த்திமான்களாகிய மனு மாந்தாதா, விக்கிரமார்க்கன் சாலிவாகனன் முதலான நம் நாட்டு முன்னரசர்களின் சரித்திரங்களில் மெய்யான விவரங்களை நம்மில் நன்றாக உணர்ந்தவர் யாவர்? அப்படிப் படித்திருந்தால் நேற்றையவரைக்கும் நாகரீகமற்றிருந்த அங்கிலேயர்கள் இக்காலத்து நம்மவர்களை வென்றிருப்பார்களா? அமெரிக்கர் அங்கிலேயர் முதலியவர்கள் முன்னாளில்நடந்த சங்கதிகளையும் இப்போது நடந்துகொண்டிருக்கும் வர்த்தமானங்களையும் காலக்கிரமமான சரித்திரமாக எழுதிவிடுகிறார்கள்; நம்மவர்களோ! அந்தந்தக்காலத்தில் நடக்கும் சங்கதிகளில் கவிச்சுவை உணரும் தன்மை உடையவர்களுக்குச் சந்தோஷந் தரத்தக்கவைகளையும் அலங்காரமாக எடுத்து வர்ணிக்கத்தக்கவைகளையும் வைத்துக்கொண்டு மற்றதை மறந்துவிடுகிறார்கள். இதனால காவியம்பண்ணக்கூடாதென்பது நமது கொள்கை அல்ல. ஆனால் சரித்திரம் செய்வதையும் மறக்கக் கூடாதென்பதே.

இங்கிலீஷ் பாஷையின் மூலமாக சரித்திர வித்தையைக் கற்றவர்கள் பாரத இதிகாசத்தைச் சுதேச பாஷை மூலமாக ஜனங்களுக்கு உபகாரம் செய்கிறதில்லை. "நமது அரசன் எப்படிப்பட்டவன்? நமது நிலைமை எத்தகையது? அரசாட்சி நியாயமாய் நடந்துவருகிறதா இல்லையா" என்று கிராமாந்தரங்களில் பண்டிதர்கள் நன்றாக அறிகிறதில்லை. மடாதிபர்களும் அறிகிறதில்லை. ஆதலால்தான் அவர்களுக்குச் சுதேசக்ஷேமத்தில் நாட்டமில்லை; உபந்நியாசங்களில் கவனமில்லை. சோமயாகாதி கிருதுக்கள் செய்யுங்காலத்தில் அநேகம் பண்டிதர்கள் சாஸ்திர விஷயங்களைப் பற்றிப் பிரசங்கம் செய்வதைப் பார்த்தும் கேட்டுமிருக்கிறோம். அப்பொழுது சரித்திராததியயனத்தினால் ஞானமுள்ள பண்டிதர்கள் தேசக்ஷேமம், மதாபிமானம், ராஜ்ய நிர்வாகம் முதலிய விஷயங்களைப்பற்றிச் சபையிலுள்ளோர் இருதயத்தை உருக்கத்தக்க வார்த்தைகளினால் உபந்நியாசங்கள் செய்தால் மிகுந்த நன்மையுண்டாகும். இப்படிப்பட்ட தேசோபகாரமான விஷயங்களுக்குச் சரித்திரமே முதற்காரணமென்று ஆலோசித்து யாம் சிற்றறிவுள்ளோமாமாயினும், பாரதசரித்திரத்தை இப்பத்திரிகையின் மூலமாக சுருக்கமாய் எழுத உத்தேசிக்கிறோம்.

சேது முதற்கொண்டு இமையமலை வரைக்கும் பரவியிருப்பதாயும் இருபக்கத்திற் கடலாற் சூழப்பட்டதாயும் சகலமான்சாஸ்திரங்களுக்கும் மலைகளுக்கும உற்பத்தி ஸ்தானமாயும் புண்ணியமான க்ஷேத்திரங்களும் ஆலயங்களுமுள்ள இடமாயுமிருக்கின்ற பாதகண்டமாகிய இந்தக்ஷேத்திரமானது அங்கிலேயர்களாலும் அவர்கள் மொழியிற் பயிற்சியுள்ளவர்களாலும் இந்தியாவென்று சொல்லப்பட்டு வருகிறது. கோதற்ற சரிதை உள்ளவனும ஒப்பற்ற பலமும் பராக்கிரமமுள்ளவனுமாகிய பரதனென்று பேருள்ள அரசன் ஒருவன் முற்காலத்திலிருந்தான்; அவன் துஷ்யந்தன் என்னும் மன்னனுக்கு மகன். அவன் அறிவாலும் திறமையாலும் விரோதி அரசர்களுடைய கூட்டத்தைக் கீழ்ப்படுத்தி இத்தேயத்தவர்களை தன்புகழாகிய வெண்குடைக்கீழ் நிழற்றினானென்று புராணங்கள் மொழிகின்றன. ஆதலால் இத்தேயத்திற்குப் பாதகண்டமெனப் பேர்வந்தது. இவ்வரசனுக்குமுன்னால் வெகுகாலம் இத்தேச

[illegible]

மிகுந்த ஆண்மையும் குறைவிலாச் செல்வமும் குடிகளின் வறுமைக்கு வறுமைஉண்டாக்கும் நாட்டமும் சரணமடைந்தவர்களை ரக்ஷிக்கின்ற பெருந்தன்மையுமுள்ள மன்னர்களாற் காப்பாற்றப்பட்டுவந்ததென்று தெரியவருகிறது. துஷ்யந்தன் மகன் பரதன்காலத்துக்குப்பின்னாலிருந்த அரசர்களும "மனிதர்களாற் செய்தற்கரிய செயல்களுடையவர்களாயும், தங்கள் பிரதாபத்தினால் கொளுத்தப்பட்ட பகைவர்கள் கூட்டத்தை உடையவர்களாயும, நீதி தவறாத செங்கோலோச்சினவர்களாயும், அயல்நாட்டரசர்களை வியக்கத்தக்க நல்லொழுக்கமுள்ளவர்களாயும, தங்கள் தண்ணருளென்னும் பேராற்றினால் குடிகளென்னும பயிர்களைச்செழிப்பித்தவர்களாயும், மறைநெறிசுகிக்கைசந்தவர்களாயும் இவ்வாரியாவர்த்தத்தை ஆண்டார்கள்" என்று புராணங்கள் கூறுகின்றன. இம்மாதிரியாக இப் பூமியானது நல்லரசர்களின் அரசாட்சியால் களிப்படைந்ததாயும, தத்தம நெறிதவறாத பலவருணத்தவர்கள் வாழப் பெற்றதாயும், மேன்மேலும் வளருந்தன்மையுடைய வடமொழி நூல்களால் அலங்கரிக்கப் பெற்றதாயும சொல்லப்பட்டிருக்கின்றது. பராசரர் புத்திரர் வியாசர் வேதத்தைப் பரிசோதித்து, அறியாமையிற் கிடந்துழலும் பலருக்கு உபயோகமாகும்பொருட்டுப் பதினெட்டுப் புராணங்களையும் சந்திரவம்சத்தரசர் சரித்திரமாகிய மாபாரதத்தையும் செய்தது இக்காலத்தில்தான்; சொற்சுவையுள்ள பாவலர்களிலெல்லாம் முதன்மை பெற்ற வால்மீகி இத்தேசத்தவர்களின் கவித்திறமையை வெளிப்படுத்துகின்ற சூரியகுல சரித்திரமாகிய இராமாயண மென்னுங் காவியத்தைச் செய்ததும் அக்காலத்தில்தான். நான்கு வருணங்களையும் ஏற்படுத்தி, சர்வஜன சம்மதமான நீதிநூலைப் பயிற்றிய எல்லாமறிந்த மனுவும இவ்வுலகிற்றோன்றியதும் அக்காலத்தில்தான் திருமகள் கணவனாகிய, நல்லோரைக்காப்பாற்றும் கருணைக்கடலாகிய எல்லாஉலகங்களிலும் இருப்பவர்களைப் பாதுகாப்பதை விரதமாகக்கொண்ட பகவானாகிய திருமாலும், கொடியவொழுக்கமுள்ள இருள் மலிந்த இருதயமுள்ள அசுரர்கள் அரக்கர்கள் முதலியவர்களை தன்னுண்மையாகிற் தழலுக்கு விறகாகச் செய்யும்பொருட்டு இப்பூவுலகில் மீனன் வராகம் முதலிய பல உருவமாக அவதரித்து அடியார்க்குதவிபுரிந்தார், தீயோர்களை அழித்தாரென்பது இக்காலத்திற்றானென்றும் அப்புராணங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. மிகுதிபாகக் கூறுவதாற் பயனென்ன? இவ்வாறே கிருதயுகம், திரேதாயுகம்,துவாபரயுகமென்ற மூன்றுயுகங்களிலும். கருணையால் இவ்வுலகிலவதரித்த தேவதைகளும், அனுக்கிரகவசத்தால் மாகாத்மியத்தைப்பெற்ற மனிதர்களும் பலசட்டங்களை ஏற்படுத்தி நன்றாய் ஈறிது சிறிதாகமுயன்று கடையில் பேரின்பமே வடிவாகக்கொண்ட கடவுளை யோகியானவன் காண்பதுபோல உயர்ந்தபதவியை அடைந்தது.

மிகக்கொடிய ஆலாலமாகிய பெரும் நஞ்சைப் போல பொறுத்தற்கரிய தீயவொழுக்கமலிந்த கலிகாலமாகிய காரிருள் பரவுங்காலத்திலேயும், பிறர்க்குதவி செய்வதால களிப்படையும் உள்ளத்தவர்களாயும், அன்னியமதங்களாகிய துர்க்கிரகங்கள் நெருங்குங் காலத்துத்தங்கள்மதத்தை முன்னுக்குக்கொண்டு வருங்காரியத்தில் நாட்டமுள்ளவர்களாயும், மிக்க பழைமை இன்மை பெருங்காற்று, பெரும்நோய் முதலிய விபாதங்கள்

[illegible]

உண்டாகுங்காலத்தில் குடிகளைக்காப்பாற்றும் பொருட்டு நம் மாலானதைச்செய்தும், தங்கள் பொருள்களை எல்லாங்கொடுத்தும், பிறகு மந்திரிமார் முதலிய உத்தியோகஸ்தர்கள், புதல்வன் முதலிய உறவினர்கள், பிறகு பெண்சாதி முதலியவர்களையிழந்தும் மீண்டும் வேறுவழி யில்லாமையால் தம்முயிரையுங் கொடுத்து தம வாழ்விற்கும் நாட்டின் வாழ்விற்கும் வித்தியாசமறியாமலிருந்த தேவர்களே என்று சொல்லத்தக்க டல அரசர்கள் ஆண்டார்களென்றும் புராணங்கள் கூறுகின்றன. இத்தேசத்தில் எங்கும் காணத்தக்கவைகளாயும், இக்காலத்தவர்களால் செய்யக்கூடாததாயும், வேறுநாடுகளில் அகப்படக்கூடாதனவாயும், காலஞ்சென்றும் வன்மைகுறையாததன்மையுளவாயும் இருக்கிற சிறந்தகோட்டைகளும் ஆலயங்களும் எவர்களால் நிர்மாணம்செய்யப்பட்டன? பிற்காலத்தவர்கள் பிறவிக்கடலின் பெரும்வெள்ளத்திலுழன்று, பணத்தையே தெய்வமாகக்கொண்டு பரதேவதையை மறந்து, சிற்றின்பங்களில் மனதை நுழையவிட்டு கலிகாலத்தின்பாவயிருட்டினால் மதியிழந்து நாசத்திற்கிரையாவாரென்றறிந்து முத்தியளிக்கத்தக்க தெய்வங்களை ஆங்காங்கு பிரதிஷ்டை செய்தவர்கள் யாவர்? மானம் பார்த்தசீமைகளில் பெரும்பஞ்சத்தால் ஊணிற்குத்தானியமற்று பசியினால்வருந்தும் ஏழைகட்கு உதவும்பொருட்டு பெரிய ஏரிகளும் ஆறுகளும் யாரால்வெட்டப்பட்டன? மிகவும் பிரயாசைப்பட்டு சிற்பசாஸ்திரங்கள் யாரால்விருத்திசெய்யப்பட்டன? மானியங்கள் மிகுதியாகவிட்டு சிற்பிகள் யாவரால் ஆதரிக்கப்பட்டார்கள் இப்படிப்பட்ட சாதாரணமான அரசர்களுக்கு இடைக்கக்கூடாத தர்மங்களை எல்லாம் கலிகாலத்தில் ஆரம்பத்திலிருந்த அரசர்கள் தான் செய்தார்களென்பதற்கு ஐயமில்லை.

பிறகு பேர்பெற்றவிக்கிரமாதித்தன் ஆரிய வர்த்தத்திற்கு அரசனாகவந்தான். அவன் "தேசக்ஷேமத்தின்பொருட்டு உலகத்திற்பிறந்த அரசர்களுக்கெல்லாம் முதன்மையானவன் கலிபுருடன் செய்யுங்காரியமாகிய பெருமலையின் இறகிற்கு வச்சிராம்போல் வந்தவன் தன்புகழின் மிகுதியால் திசைகளையெல்லாம் வெண்மையாகச்செய்தவன் விண்ணுலகிலும் மண்ணுலகிற்போல் பாட்டம்பெற்ற குணங்களையுடையவன கடுமையான தவத்தினால் பார்வதியின் பிரசாதத்தைப்பெற்றவன் பரதநாட்டார்க்கு தபோராசிபோன்றவன்; கற்றோர்களாகிய சகோரங்களுக்கு முழுமதிபோன்றவன்; பாமதமாகிய இருட்டிற்கு சூரியன்போன்றவன்; எல்லாக்கவிகளுக்கும் உறைவிடமானவர்; வினயத்திற்குத் தங்குமிடம்போன்றவன்; பலவிதச் செல்வங்களாகிய ஆறுகளுக்குக் கடல்போன்றவன்,, என்றறியவருகிறது. மனிதர்க்கு மிகவுமுதவிபுரிந்த இந்த மன்னன் நமது தேயத்திற்புகழைவிளைவிக்கும் மகாகவிகளை ஆதரித்தானென்பது இக்காலத்தவர்களாலும் புகழுடன் சொல்லப்படுகிறது. மிகவன்போடு அங்கீகரிக்கப்பட்டு அவனிடத்திலிருந்து வெகுமானங்களைப்பெற்ற காளிதாசர் முதலான கவிகளும் ரகுவம்சம் முதலிய சிறந்தகாவியங்களைச்செய்தார்களென்பது ஒருசெய்யுளால் தெரியவருகிறது. அதன் பொருள் "தன்வந்திரி, க்ஷபணகன், அமரஸிம்மன், சங்கு, வேதாளபட்டன், கடகர்ப்பரன், காளிதாசன், வராஹமிஹிரர், வரருசி இவர்கள் சபைக்கு நவரத்தினங்கள்,, என்று சொல்லப்படுகிறார்கள்.

இன்னும்வரும்.

[illegible]

[illegible]

[illegible]

விக்கிரகாராதனம் வைதிகமேயன்றது.

வியாசாசாரியர் கூறுகின்றார்:—[illegible] எக்காலமும் ஹரியைபூஜை செய்வானுக்கு என்று ஸ்ரீமந்நாராயணன் திருவ்வியாராதனத்தை விதித்து உடனே ([illegible]) அல்லது நக்ஷத்திரத்துடன் பரமசிவனைப்பூஜிப்பானுக வென்று சிவாராதனையை விதித்தார். சந்திரிகையென்னும் புத்தகத்தில் ([illegible]) [illegible] என்னுந்தமது சாகையிற் கூறியபடி கிரியைகளை முடித்து அக்கினிஹோத்திரஞ்செய்து ஸ்ரீ பரநாராயணனை பூஜிப்பாயாக என்றும், வியாசாசாரியர், ஹாரீதர், சௌனகர், மௌத்கல்லியர், சாண்டில்லியர் முதலிய ஐவர், பிம்பாராதனத்தை எடுத்துக் கூறினமையை அம்மகான்கள் இயற்றிய புத்தகங்களிற் காண்க. இனி ஐந்தாம வேதமென ஆரியர் கொண்டாடப் பெருமபுகழ்பெற்ற ஸ்ரீ மகாபாரதமென்னுந் திவ்விய கிரந்தத்தில் ஆசுவமேதிகபர்வத்தில் ([illegible]) ஸ்ரீமந்நாராயணனது திவ்வியமூர்த்தியை பொன் வெள்ளிகளாற் செய்து தன்னுள்ளங்கவர அழகு பொருந்திய அம்மூர்த்திகளைப் பூஜிக்கவேண்டும்; வந்தனஞ்செய்தல்வேண்டும்; அவைகளை ஜபித்தல்வேண்டும் என்றிருக்கின்றது. பாகவதத்தில் ஏகாதசஸ்கந்தத்தில் ஸ்ரீ பகவானது திருவாக்குகளாய் சிலவாக்கியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன; அவையாவன: வைதிகமெனவும், தாந்திரிகமெனவும், மிச்ரமெனவும் ஆகிய இம்மூன்றுதமது பூஜை; மூன்று வருணத்தவர்கட்குமுரிய கிரியைகளைக்கொண்டு என்னை ஆராதித்தல்வேண்டும் என்பன. இனி பகவச்சாத்திரமெனவழங்கும் ஸ்ரீபாஞ்சராத்திரத்தில் [illegible] தேவதைகளிலும் பெரிய கண்டங்களிலும் தீர்த்தங்களிலும் பெரிய ஆலயங்களிலும் மனிதர்களாற்செய்யப்பட்ட பிம்பங்களிலும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு மனிதனிடத்திலும் மண்ணாலும் உலோகத்தாலும் சிலையாலும் நான் நின்றருள்வேன் என்றுளது. உலகத்தில் (அர்ச்சா) என்னும்பதம் (அர்ச்சி) என்னும் வடமொழிப் பகுதியினின்று உண்டான சொல்லாதலால், பூஜிக்கப்படும் வஸ்துவெனப்பொருள் கொடுத்து பரமேசுவரனது பிம்பங்களையே யுணர்த்தும். பிரதிமை முதலிய பதச்சொற்கள், மனிதர்கள் மிருகங்கள் முதலியவற்றின் பிரதிமைகளையுங்குறிக்குமென்றும், ஒவ்வொரிடத்து உபசாரமாய் அச்சொற்களால் பகவானது திருவுருவை வழங்குவதுண்டு. அர்ச்சா என்னுஞ்சொல்லொன்றுமாத்திரம் அச்சடவளது திருவுருவைக்குறிப்பதாக எமதுகருத்து. ஸ்ரீமான் பாணினிமகரிஷியும் [illegible] முதிய வியாகரணசாஸ்திரத்தில் [illegible]

S.5467

[illegible]

ணம் என்ற இவ் வார்ச்சா எனனுஞ் சொல்லினிலக்கணத்தை எடுத்து வகுத்தார். ஆகலால், (அர்ச்சை] என்னுஞ் சொல் எமது திருவருட் திருவுருவையே குறிக்குமென்றறிக. புருஷஸூக்தத்திலும் நாரதஸநத்குமாரஸம்வாதத்தில், ஸ்ரீமந் நாராயணன் உலகத்திலுள்ள உயிர்க்கோடிகளை அக்கியான யிருளில் தியங்குவதைக்கண்டு மனமுருகி, அவர் அவ் வக்கியான இருள் நீங்க அதிக கருணையால் எனது திவ்வியரூபத்தைப் பலரும் பார்த்துக் களிக்கப் பிம்பங்களில் ஆவிர்ப்பவிப்பேன் என்றுளது. மேலும், அத்திரிமகரிஷி தமது கிரந்தத்தில், "எங்கும் நிறைந்துள்ள வாயு, எமக்குப் புலப்படாமல் எமது வியர்வைகளை உலர்த்து மீண்டுஞ் சுகந்தருவதில்லை. அதே விசிறி அசைத்தால் அவ்வசைவால் வெளிவந்து நமது தேகசுகத்தைத் தரக் காண்கிறோம். அங்ஙனமே அக்கினியும் எங்குமுள தாயினும், மற்றைப் பொருள்களை விளக்கக் கண்டிலேம். ஒன்றைக் கொளுத்தவுதவாது; அதே பொருள் ஒரு சமயம் அரணி முதலியவற்றில் வெளியானால் அதைக்கொண்டு அவ்வேலை முடிகின்றது. அங்ஙனமே எங்கும் நிறைந்த எம்பிரான் திருவருள் வேதசாஸ்திரங்களின் உண்மையறிந்த பகவான்கள் செய்யும் பிரதிஷ்டாதிக்கிரியைகளால் ஓர் தாருண பாஷாண லோகாதி வஸ்துக்களில் ஆவேசித்துத் தன்னையடைந்த தொண்டர்களுக்கருள் புரியும்," என்றார். அன்றியும், அருபமான ஆவி சலக்கிரியைகளால் நீராவதுபோலும், அருபமான அக்கினி வாயுக்கள் சிலகருவிகளால் வெளியாவதுபோலும் ஸ்ரீபகவானது பேரொளி விருத்தியடைந்து திவ்வியப் பிம்பங்களில் விளங்குவதையும் அவரே எடுத்தோதினர். பிருகு மகரிஷியும், "உலகத்தில் பயில் தனது தோகையை அடக்குவதுபோல் பரமாத்மா தந்து லீலாவிபூதிகளை அடக்கித் தொண்டர்களை அனுக்கிரகித்தற்பொருட்டு பிம்பங்களிலவதரிக்கின்றார்," என்று கூறுகின்றார். காருடபுராணத்தில் "எவ்வவ்விடத்து ஸ்ரீநாராயணன் தமது பிராட்டியாருடன் எழுந்தருள்வான் அவ்வவ்விடத்தில் அவனைப் பூஜிக்கவேண்டும். அவ்விதப் பூஜை சித்தர்களுக்கு மனிதர்களுக்கும். பற்றவிடத்து எவ்வெவ்விடத்திலே யாவரெவர் எந்தெந்தமூர்த்திகளைப் பிரதிஷ்டிப்பரோ, அவ்வம்மூர்த்திகள் மட்டில் ஆங்காங்கு ஆவிர்ப்பவித்து அருள்புரியுமென உணர்தல் வேண்டும்," என்று சாதாதபஸ்மிருதியில் கைக்குஷ்டம் (வாருஷவாணி) என்கிற ரோகத்திற்குப் பிராயச்சித்தமாய்ப் பரமேசுவரனது திவ்வியாலய நிர்மாணம் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. சிற்பாணியின் பெரிய நூலில் தேவாலயங்களில் மகோற்ஸவாதி விருத்தி செய்யவேண்டும், என்றிருக்கின்றது. "அச்சுதனாலயத்தில் அனேகபுஷ்பங்களால் ஆராதித்து," என்ற தொடக்கிய சில வசனங்களை அங்கு காண்க. ஸுமர்ச்சயம் என்கிற நூலிலும் "தேவாலயத்தில் தீபத்தை யணைத்தால் அவன் திமிரரோகி," என்று சாற்றுகின்றது. [illegible] தேவபிம்பங்களை உடைத்தவன் மகாபாபி என்று சாதாதப மகரிஷி சொல்லுகின்றார். உவண ஸாக்ஷியில் பரமசிவாலயங்களில் ஓர்வகையிலிரப்பதலை வேண்டுமென்றும், தேவாலயத்தின் சொத்துக்களை அபகரித்தல் ரோக

[illegible]

ஹேதுவென்றும் சங்கிரகம் என்னும் நூல் விளக்குகிறது. மனுஸ்மிருதியில் [illegible] இதன்பொருள் "கிரகஸ்தன் தேவதைகளையும், ரிஷிகளையும், மனிதர்களையும், பிதிர்தேவதைகளையும் கிரகதேவதைகளையும் பூஜித்து பிறகு போஜனம் செய்யவேண்டும் என்பது. இதில தேவதைகள், ரிஷிகள், மனிதர்கள் பிதிர்க்கள் இவர்களைப் பூஜிக்கவேண்டுமென்பதால், பஞ்சயஞ்ஞங்கள் குறிக்கப்பட்டன. கிரகதேவதைகளென்பதால், கிரகத்திலாராதிக்கத்தக்க தேவதாபிம்பங்கள் கொள்ளற்பாலன. அதேமனு பற்றொரிடத்து ([illegible]) இதன்பொருள்: கல் முதலியவற்றாற் செய்யப்பெற்றதேவதைகள், ஸ்நாதகவிருதம் செய்தவர்கள், ஆசிரியர்கள், தீக்ஷிதர்கள் இவர்கள் நிழலைக்காலால் தீண்டலாகாது. என்பது. இங்கு தேவதைகளின் நிழலைக் காலால் தீண்டலாகாதென்பதால், தேவதாபிம்பங்களே அச்சொற்பொருளென பதுட்குரித்து. "தேவதைகளின் சொத்தைய பகரித்தவர், எந்த லோகஞ்செல்லினும் ஆங்காங்கு இழிஞர் ஆவார்" என்றுமிருக்கின்றது. தேவர்களின் சொத்தென்பது பிம்பருதேவதைகளினது சொத்துக்களென்றே சொல்லவேண்டும். இவ்விதம் "ஓரிடஞ்செல்லும்பொழுது எதிரிலகப்பட்ட மண், அந்தணர், கோ, தேவதைகள் முதலியவற்றை வலமாகச்செல்லுக," வென்றும், தேவதாதரிசனம் செயல்வேண்டுமென்றும் தேவாலயங்களில் அசுத்தி செய்தல் கூடாது என்றும் அநேககோடி வசனங்கள் உள. விரிவஞ்சி விடுத்தோம்.

(மொழிபெயர்ப்பு-) இங்ஙனம்

இலத்தூர். சுந்தரராஜசாஸ்திரி

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:—1888ஸ ஆகஸ்டு 31வ வெள்ளிக்கிழமை.

மறுபிறப்பு.

(முன்தொடர்ச்சி)

ஐய,

முன் ஜோதிஷர் இவ்விஷயத்தில் கேட்டகேள்விகளிற் சிலவற்றிற்குச் சமாதானமளித்தோமில்லை. இனி நாம் அவர் கேள்விகளில் மிகக் கடினமான வற்றிற்செல்லாம் விடை பகர்த்து இச்சிறு கேள்விகளை மாத்திரம் அலட்சியஞ்செய்து விடுவோமாயின், அவர் இம்மட்டில் களித்து சந்தோஷமடை

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

[illegible]

[illegible]

கேள்விகளிற் சிலவற்றிற்குச் சமாதானமளித்தலரிதென்று எண்ணுவர்கள். ஆதலால், அச்சிறு கேள்விகளையும் எடுத்து விளக்கி மறுப்பாம். அவர்கள் வினாக்களில் ஆறாவது இது:—"புண்ணியம் பாவம் என்பன உலகக்கட்டுப்பாடாகையால் அதற்கென மறுபிறப்பேற்படாது" என்பது இதன் கருத்து ஐய! யாம் கண்கூடாதாய்ப்புண்ணியமென்னும் பாபமென்னும் ஒன்றிருக்குமேல், அதைக்கொண்டெவ்விதயாவது மறுபிறப்புண்டென்று கொள்ளலாம். அதுவும்பொருந்தாது. ஏனெனில், ஒவ்வொரு தேசங்களிலொவ்வொரு கூட்டத்தார் தத்தந் தேசங்களுக்கேற்ப செய்துகொண்ட யேற்பாடுகளே புண்ணியம். அவைமீறிநடத்தலேபாபம். இத்தேசத்தில் மட்டில் சிலர் தமதினத்தார் பிழைக்கவேண்டி, வீண்கட்டுப்பாடுகளடங்கிய சிலபுத்தகங்களை யெழுதி அவற்றிலநேகவற்றைப் புண்ணியமென்றெழுதி நுழைத்தார். அது நம்பத்தக்கதன்று. ஆதலால் அதுகொண்டு மறுபிறப்புண்டெனச் சாதித்தலும் சக்தியாது என்பது. இதற்குச்சமாதானம்;

ஐய,

இவர்கள் கூறுகிறபடி ஜனங்களின் சுக துக்கங்களுக்கே ஏற்பட்டது. புண்ணிய பாபங்களுண்டென்பதிற்றடையில்லை ஆயினும் இவர் கருதுகிறபடி நம்தேயத்தவர் எழுதிவைத்தவைகள் மட்டில் காரணமில்லாத வெறுமொழிகளல்ல. அவற்றை யுற்றுநோக்கில், அவற்றின் பெருநலம் விளங்கும். கருமங்களில் ஒவ்வொன்றும் மனிதன் சுகத்திற்கே ஏற்பட்டதென்பதை கருமத்தைப்பற்றிய வுபந்நியாசத்தில் விரித்துக் கூறுவாம். ஆயினும், அவர்களுக்கும் எமக்குமுள்ள வேற்றுமை இது; மேற்றிசையார்சிருட்டிகாலமுதல் ஏற்பட்டுவருவதாயவொருகருமத்தையும்ஒப்பார்யாமோ! அங்ஙனமுரைத்தாரில்லை எக்காலமுதல் மனிதசிருட்டி ஏற்பட்டதோ அக்காலமுதல் புண்ணியபாபங்களைக்கொண்டே ஊழைசெய்து குருமுதலிய சிருட்டிக்குத் தாரதம்மியம் ஏற்பட்டுவந்ததாக யுக்திக்கிட்டபொருந்த முன்புரைத்தோம். இஃதை யொப்பாது நாத்திகர், இதற்குக்காரணமின்னதென்று நம்பாமலும் இத்தனைமைத்ததெனத் துணியாமலும் இருக்கின்றார்;

இங்கு அறியற்பாலது இது: இப்புண்ணியபாபங்கள் உலகத்தார் கட்டுப்பாடானால், அதற்கு எல்லோரும் பணிந்தளராமல் அனுட்டித்தலமையாது. உலகத்திலொருவன் மற்றவர் சுகமடையக்கருதி தனது சொந்தசுகத்தை இழந்துவிடான். அவ்விதஞ்செய்வதால் நமக்குள்ளபயன் யாதுமில்லை. ஒருசமயம் மறுமைப்பயனிருப்பின் உலகசுகத்திற்குப்பாடுபட்டவன் மறுமையில புகழுடைவான் என்றுவதுரைக்கலாம். அஃதுசந்தேகமென்று ஒப்பின நாத்திகர்க்கு பொதநனைமையில் திருவுளம்திரும்புவதரிதே. ஆதலால் இவர் கொள்கையில்ஜனங்கள் வரம்பமீறி மிருகங்களின்றன்மையையடைவார்கள். தமக்குப்பலங்குறைவாயின் அவன் மற்றவர்பொருளைத் திருட எத்தனிக்கக்கூடாது என்பதாகநாத்திகர் கொள்கைமுடியும். இவ்விதம் உலகத்திற்கு நேரிடும் பெருநட்டத்தைவிலக்கவேண்டி கடவுளே நமக்கு இப்புண்ணிய பாபப் பகுத்தறிவை யளித்தார் என்பதே நியாயமாகும்.

[illegible]

உலகத்தில் மனிதர்கள் தேசகாலங்களைச் சிறிதுங்கவனியாது உண்ணல் உடுத்தல் உல்லாசமாயிராத்தலிவைகளைக் கைக்கொள்ளார்கள். மிருகங்களோ! காலத்தையும் இடத்தையும் ஏனைய வ்விதசௌகரியங்களை எதிர்பாராது மனஞ்சென்றவழி மேற்குறித்த வேலைகளை நடத்தி முடிக்கும். யாமும் ஓர்சமயம் ஒன்றுகூடி மிருகங்களைப்போல் அநுட்டிக்க முயலுவோமேல், அதுவும் ஜனசமுதாயக்கூட்டத்தில் ஏற்பட்டதாதலால் புண்ணியபாபமென நாத்திகர்கள் ஒப்பும்படி நேரிடுமோ? அந்தோ! பாருங்கள்!! ஒருதேசத்திலாவது ஒருகூட்டமாவது முற்றிலும் தமது மனம்போனவழி நடப்பதும் நாத்திகர் கைக்கொள்வதும் தர்மமாயக்கொண்டிருக்கிறார்களா? மானுஷீகத்திற்கும் மிருகத்தன்மைக்கும் எத்தேசத்திலாவது வேற்றுமையற்றிருக்கின்றதா? ஆதலால், இவ்விதப்புண்ணிய பாப ஏற்பாடு உலகத்திலுள்ள உயிர்கொடிகளினுள்ளத்திலெழுந்தருளி அவரவர் மனோவாக்கு விருத்தியை யறிந்த அப்பரஞ்சுடராற்றான் அவ்வதம்தசத்தினியற்கைக்கேற்ப நியமனப்படுத்தப்பட்டதென்றறிக. இனி ஒவ்வொருமனிதன் ஒவ்வொரு தேசத்திலுள்ள எல்லாமனிதர்களையும் ஒருங்குகூட்டி ஓர்தர்மங்களைமநுட்டிக்கச்செய்தானெனபது ஒவ்வாதல்லவா? எல்லோரும ஒவ்வொரு தேசங்களிற்கூடி சற்சில ஏற்பாடுகள் செய்துகொண்டார்களென்று எச்சரித்திரம் கூறுகின்றது? எம்மண்டிதர் இது ஒருகூட்டத்தின் கட்டுப்பாடாலிருக்கலாமென்று புண்ணியபாபங்களைச் சாற்றுகின்றார்?ஐயா!! "புண்ணியபாபங்கள் பரமேசுவரனது கட்டளையாயின், அஃதுதேசங்களாலுங்காலங்களாலும் வேறுபாடடைவது யாதுகாரணம்? ஈசுவரனுக்கு ஓர் தேசத்திலபிமானமும் மற்றோர்தேசத்தில் அதுஇல்லையா? ஒருகாலத்திலவர்களிப்பதும் மற்றொருகாலத்திலங்ஙனமில்லையா?" என மற்றவர் கேட்கும் கேள்விக்குச் சமாதானங் கூறல், எமக்குக்கடமையே. உலகத்தில் புண்ணியமென்பது யாம கடவுளுக்குச்செலுத்தவேண்டிய கடமைகளிலொன்றே அறிஞர்காள்! சற்றுக்கவனியுமின்!! உலகத்தில் புண்ணியமென்றேற்பட்டதெல்லாம கடவுளினது திவ்வியாராதனமென்றே யாமிங்கு சாற்ற வந்தோமில்லை. மற்பல புண்ணியங்கள் சரீரத்தையும் சீவனையும் தேசத்தையும் சுத்திசெய்யக்கூலி. சரீரங்களும், ஜீவன்களும், தேசங்களும் காலதேசங்களால் வேற்றுமை அடைவனவன்றோ? எல்லாமறிந்த அம்முழுமுதற் கடவுள் உலகத்திலுள்ள உயிர்க்கோடிகளுக்கேற்ப அவ்வத் தேசங்களுக்கேற்ப புண்ணிய பாபங்களை ஏற்படுத்தினார் என்பதே துணிபு. ஒருமனிதன் அல்லது ஒருகூட்டம், மற்றொரு கூட்டத்தைத் தன்வசமாக்குதல் அமையாதன்றோ? இப்புண்ணியபாபங்கள் அநாதியாதலால், அவைகளின் வேறுபாட்டைக்கொண்டும மறுபிறப்புண்டென்று நமது மதாபிமானிகள் சாதித்தல் நிலைபெறுமென்பது திண்ணம்.

இன்னும்வரும்.

கீர்வாணபாஷை.

(அநுபந்தம்)

நம்தேயத்திலுள்ள வித்துவான்கள் வேதங்களுக்கு அங்கங்கள் ஆறு என்று சாதிக்கிறார்கள். அவற்றின் பெயர்களாவன: சிட்சை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோ

[illegible]

வாலநீதிஃ

[illegible]

திடம், கல்பம் என்பவைகள். இப்பொழுது வேதாங்கங்களைப்பற்றி எழுதுவது எமக்கு முறை. மேற்றிசை முதலிடத்தில் குடிகொண்ட ஏனைய பாஷா பண்டிதர்கள், சீக்ஷா (Orthagrophy) வியாகரணம் (Etymology) நிருத்தம் (Syn-tax) சந்தம் (A part of Prosody) இந் நான்கும் பொதுவில் சொல்லிலக்கணங்களாதலால், இவை எல்லாம் ஓர் நூலென்றே கூறுவர். அவ்விதஞ்சாதித்தல் அளவுக்கடங்கிய அச்சிறுபாஷைகளுக்கமையும். வாக்குக்கெட்டாத வைபவம் பெற்ற எமது பாஷைக்கு இவை தனித்தனி நூல்களாயிருத்தலே நன்று. மற்றவர் நூல்களிலுள்ள ஓர் பிரகரணத்தில் முடியத்தக்கபொருள் நமது இலக்கண நூல்களில் ஓர் முதல் நூலாகின்றது. அதன் முதலங்கமாகிய சீக்ஷை என்பது எழுத்துகளின் இயல்பு, பிரமாணம், இடம், டலர், மாத்திராகாலம் தேவதைகள் முதலியவற்றை விஸ்தாரமாக எடுத்துக்காட்டுகின்றது. ஆதலால் இதை வர்ணகாண்டமென்றும், வியாகரணத்தில் முதற்குறி என்றும் கூறலாம். இந்நூலை வெளியிட்டவர்கள் ஒவ்வொரு வேதங்களுக்கொவ்வொருவராயினும் பாரத்துவாஜர், நாரதர், வாதராயணர், பாணினி முதலியோர்கள் பெரிய நூலின் பெருமையாற்றான் எழுத்துகள் இப்பாஷையில் சுத்தமாயுச்சரிக்கும்படி ஏற்பட்டனவென்றறிக.

வரும்.

பாலநீதி.

மூன்தொடர்பு.

எக. நோயாளிக்கு ஓயாவுதவிசெய்.
எஉ- பணவாசைமீறப் பலதோஷமேறும்.
எங- பாலத்துக்கஞ்சுபக்தியில்மிஞ்சு.
எச- பிணக்கத்தொடக்கில் இணக்கமாக்கு.
எரு- பீடைசெய்தால் பிரியங்குறைந்துபோம்.
எசா- புண்ணியவான்கள் புகழ்ச்சியடைவர்
எஎ. பூவாசனையிலும் புகழ்வாசனைநலம்.
எஅ- பெண்கள் கற்பு பெரியசிறப்பு.
எகூ- பேணிப்பார்த்தால் காணிநிலைக்கும்.
அ௰- பய்யச்செய்யினும்பணிக்கையாய்ச்செய்.
அக- பொறுப்புண்டானல் பொறுமையுண்டாம்.
அஉ. போக்கில்லாதவன் போனைவிளைப்பன்.
அங- மனமுரண்டினல் மதிபுரண்டுபோம்.
அச- மாறிப்பேசினுல் யாருமதியார்.
அரு- மிரட்டி வாங்குதல் திருட்டிலுங்கெடுதல்.
அசா- மீட்டுவிடுவது மெத்தசிறந்தது.

ஸ்ரீ:

[illegible]

சொப்பனம் சத்தியமென்பதை மறுத்து: அறிவே உலகமென வுரைத்தல்.

1888 ஆம் வருடம் பிப்ரவரி மாத 15உ பிரசுரமான ப்ரம்மவித்தியாவின்கண் "அறிவே உலகம்" (திருக்கே திருசியம்) என்னும் விஷயமொன்று சுருக்கி வரைந்தாம். இத்துஜனபூஷணி பத்திராசிரியர் அதனை 1888 ஆம் ஏப்ரல் மாத 7உ வெளியான தமது பத்திரிகையின்கண் மறுத்து விளக்கினார். 1888 ஆம் மே மீ 19உ 26உ ஜுன் மீ 29உ இல் பிரசுரமான அப்பத்திரிகைகளின் வாயிலாகவே "அத்வைதி" எனப்பெயர்புனைந்த பிரதிவாதியொருவர் 'அறிவேயுலகம்,' என்னுமுடிப்பெயர்சூட்டி யாம் கூறியதை மறுத்தார். அதனைப் பூர்வபக்ஷம் செய்து முதற் "சொப்பனம் சத்தியமென்பதை மறுத்து, அறிவே உலகமென வுரைத்தல்" என்னும் விஷயத்தையுரைக்குற்றும். இது விரிவாயிருக்கின்றமையால் இதனை சிறிது சிறிதாக வெளியாக்குதல் இம்முறையேயன்றும் மறுமுறையாயினும் ஒரே பத்திரிகையில் பிரசுரிக்க, ப்ரம்மவித்தியா பத்திராதிபரைப் பொறுமையுடன் வந்தனைபுரிந்து கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சாக்கிரவுலகம் எவ்வாறு சத்தியமோ அவ்வாறே சொப்பனவுலகமும் சத்தியமெனப் பிரதிவாதியார் அபிப்பிராயப்படுகின்றார். சாக்கிரவுலகத்தை அறிவு, புறக்கருவிகளான இந்திரியங்கள் வாயிலாக அறிகின்றதெனவும், சொப்பனவுலகை இந்திரியங்கள் வாயிலாகவன்றி நேரே அறிகின்றதெனவும் கூறுகின்றார். ஒரு பொருளை அறிய வேண்டின் இந்திரியங்களின் துணையின்றி அறிதலாகாது. ஆகுமெனின் இப்போது மெய் வாய் கண் மூக்கு செவி இவற்றின் துணையின்றி இவ்வுலகை அறிதல்வேண்டும். அங்ஙனமின்மையால் அறிவொன்று சொப்பனவுலகை இந்திரியங்களின் சகாயமின்றி அறிகின்றதென்பது கூடாது. சொப்பனவுலகை நேரேயறியுமெனின் அவ்வறிவு பிரமாணமாதலின்றி பயனையாதலுமின்றோ? அஃது பிரமாணமாயின் காண்டல் கருதல் உரைமுதலிய பிரமாணங்களிலொன்றாதல் வேண்டும். காண்டலெனக் கொள்ளோமெனின் இந்திரிய வாயில்களின்றித் தோன்றுமறிவைக் காண்டலெனக் கூறுதல் அமையாது. மானதக்காண்டலெனின் அஃதும் பொருந்தாது. மானதக்காண்டலென்பது ஆன்மாவின் சுக துக்கம் அறிவு முதலிய பல குணங்களைக் கருதுவதேயன்றி மற்ற படியல்லவென நியாயநூல் கூறுவதாலென்க. அறிவின்றிரிபே சொப்பனவுலகாதலால் மண்ணைக்காணுங்கண், குடத்தைக்காண்பது போல் அறிவையறியுங்கருவியானனம், அவ்வறிவின்றிரிபான சொப்பனவுலகையறியுமெனின், குடம் மண்ணின்றிரிபாவது போல் சொப்பனவுலகம் அறிவின்றிரிபெனவும், அதையுவமானமாகக்கொண்ட சாக்கிரவுலகமும் அத்தன்மைத்தெனவும், அதாவது அறிவே சாக்கிர வுலகமெனவும் கொள்ள வேண்டி வரும். சுவசம்வேதனப்பிரத்தியக்ஷமென்றாவது யோகக்காண்டலென்றாவது கூறுதல் முற்றிலும் பொருந்தாது. ஆதலால் இஃது காண்டலன்றென்றறிக. இனிக் கருதலென்போமெனின் அதற்கு வியாப்தி பக்ஷதருமவுணர்வு முதலிய பலகாரணங்களின்மையால் கருதலுமாகாது. உரையென்றுரைப்பாமெனின், பிரதிவாதியார் உரையன்றி வேறுரை சித்திக்கவில்லை. ஆதலால் அதுவும் அமையாது. இப்பிரமாணவிலக்கணங்கள் சற்றேனுமமையப் பெறாத சொப்பனவறிவு, மயக்கமென்றே கூறற்பாலதாமென்க.

சொப்பனவுலகு ஜாக்கிரவுலகைவிட வேறுமெய்யாயின் வேறாகவே காணப்படவேண்டும். அவ்வாறின்றி அது ஜாக்கிர வுலகமேயாகவும் ஜாக்கிர வுலகானுபவமாகவும் காணப்படுகின்றமையால் பொருந்தாது. அன்றிச் சென்னையினின்றும் மதுரைக்குப் போவதுபோலும், போவதாய்த் தெரிவது போலும் வேறுவேறு பொருளாகவும், வேறுவேறு இடமாகவும் வேறுவேறு அநுபவமாகவுங் காணப்படுதல்வேண்டும். அங்ஙனமின்றி ஜாக்கிரமே சொப்பனமாகக் காணப்படுதல்கண்கூடாம். சாக்கிரம் ஒரு மணிநேரம், சொப்பனம் பலநாளாகின்றன. இது சூரிய சந்திர நட்சத்திரங்களின் கதிக்கு முற்றும் விரோதம். ஜாக்கிரத்தில் குழந்தைப்பருவமுதல் 70-ஆம் வரையில் வளர்ந்துவந்ததாகவறிகின்றோம். சொப்பனத்திலும் குழந்தைப்பருவமுதல் 70 வயசுவரையில் வளர்ந்துவந்ததாக அநுபவப்படுகின்றது. சொப்பனத்தில் காணும் ஷெ அநுபவமுண்மையாமா? அதுமட்டில் ஷெ அநுபவம் மயக்கமென்றும் அசத்தியமெனவும் ஒப்புக்கொள்ள விடில் வேறுவழியுண்டோ? சேலத்திலிருந்து மதுரைக்கு 20-வயசில் போவோமாயின் 20-வயசில் போவதாகவே தெரிகின்றது. அங்ஙனமே ஜாக்கிரத்திலிருந்து 20-வயசில் சொப்பனவுலகத்திற்குப் போவோமாயினும் (அதாவது சொப்பனவஸ்தையைக்காண்போமாயினும்) அவ்வாறு தோன்றாது, இளமைப்பருவமுதல் அவ்வளவுமையில் வளர்ந்துவந்ததாகவே அநுபவப்படுகின்றது. ஆதலால் சொப்பனம் மயக்கமேயாம்.

அறிவு ஜாக்கிர சரீரத்தினின்றும் சொப்பன வுலகைக் காணுகின்றதெனின் ஜாக்கிரவுலகிலேயே சொப்பனவுலகிருத்தல் வேண்டும். ஒரு இடத்திலிரண்டு சத்துப்பொருளிருத்தல் அசம்பவமாம். மனம் இச்சரீரத்தைவிட்டு ஆகாசமாய்ச் சென்று சொப்பனவுலகை யடைகின்றதெனின் அதுகாலத்து மனமிச்சரீரத்திலில்லாது சொப்பனசரீரத்திற்செல்கின்றதாகின்றது. அங்ஙனமாயின் மனத்தினுடன் ஜீவனும் பிராணனும் அச்சரீரத்திற் சென்று இச்சரீரம் பிணமாதல்வேண்டும். நித்திரைபுரியுங்கால் இச்சரீரத்தில் உஷ்ணம், பிராணன், நாடியடித்தல், ரத்த ஓட்டமுதலியவிருத்தலாலும், பிணம்போல் அமங்களமாயின்றி மங்களகரமாயிருத்தலினாலும் அஃதுண்மையன்று.

சொப்பனத்தின்கண் திரிசிராபுரத்திற்கு வடக்கு, மதுரையிருப்பதாகவும், வட திசையில் சூரியோதயமானதாகவும், மிருகங்கள்பேசுவதாகவும், நாம் பறப்பதாகவும், நாம் மரித்து நடமாடுவதாகவும், இன்னுமிவைபோன்ற அசம்பவமானவைகளையும் பார்க்கின்றோம். நாம் ஒவ்வொருநாளிலும் பலசொப்பனங்கள் காண்கின்றோம்; அவற்றில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லை. சொப்பனம் சத்தாயின் ஒவ்வொருமுறையிலும் காணுமுலகு, வேறுவேறெனவே கொள்ளற்பாலது. அவ்வாறின்றென்பதை நாமறிகின்றோம். பல்லாயிரங்கோடி ஆத்துமாக்கள் தங்களாயுளில்காணும்சொப்பனவுலகங்கள் இத்தனைகோடியென்றெண்ணுதற்கரிதாமென்பது திண்ணம். எண்ணிக்கையிலடங்கா அத்தனைகோடி சொப்பனவுலகங்களும் இவ்வொரு உலகிலேயே இருத்தல்வேண்டும்; மனமிச்சரீரத்தினின்றே (சத்தென்றவர் கூறும்) சொப்பன வுலகைக் காண்கின்றதெனப்பிரதிவாதியாருரைத்தலினாலென்க. ஒருசத்துப்பொருளின்கண் பிறிதொரு சத்துப்பொருளேயிருத்தல் அசம்பவமெனின் அளவற்றகோடி சத்துப்பொருளிருத்தலா மெனல் யுக்தி அநுபவவிருத்தமேயாம்.

நாமிங்ஙனம் சத்துப்பொருளைக் காண்போமாயின், இது வேறு, அது வேறு என்னும் பேதஞானமுண்டாகின்றது. அவ்வண்ணமே ஜாக்கிரவுலகம் சொப்பனவுலகமாகிய இரண்டுஞ்சத்துப்பொருளாயின் இரண்டுந் தனித்தனியே வேறென்னும் ஞானமுண்டாகவேண்டும். அவ்வாறின்றி யிதுவே அதுவென்னும் ஞானமுண்டாயின், இரண்டுஞ் சத்தெனல் அமையாது. ஜாக்கிரத்துள்ள பொருளைக் கனவின்கண் காணுகின்றோம். அப்பொருளுக்குக் குறித்தாங்கு அதுபோன்றதோ? அதுவன்றெனின், அது இருக்குமிடத்தில இவ்வுலகுசென்றிருக்கவேண்டுமே? யாம்சென்றமையால் இந்தத்தேகம் பிணமாதல்வேண்டும். சாக்கிய வலகத்தைக் கண்ட அக்கடியாரத்தை ஒருமாசத்துக்கு முன் வாங்கி வீட்டில்வைத்தோம். சொப்பனத்தில் அக்கடியாரத்தை வீட்டிலிருக்கக் காணும்போது, ஒருமாசத்துக்கு முன் வாங்கினோமென்னும் ஞானமுமுண்டாகின்றது. அதனை ஜாக்கிரத்தில் வாங்கினோமேயன்றிச் சொப்பனத்தினிடமன்று. ஜாக்கிரத்தில் இறந்தவர்களைச் சொப்பனத்தி லுயிருடனிருக்கக் காண்கின்றோம். புத்திரனில்லாதவொருவன் புத்திரன் பிறந்ததாகப் பார்க்கின்றான். பித்தம் சந்நிபாதம் தோஷம் முதலியவற்றால் கனவு கனவல்லாத வேறு உலகம் தோற்றுகின்றது. நனவில் அதிகம் வேலைசெய்யின் கனவு காண்பதில்லை; அல்லது விசேஷமாய்க் காண்பதில்லை. சில பித்தபதார்த்தங்களைத் தின்போமாயின் விசேஷ சொப்பனங்காணுகின்றோம். நித்திரையின் வசமன்றேயன்றிக் கனவின்வசம் நித்திரையன்று. கனவு இதைப்போன்ற வேறுசத்தாயின் அது வேறுமாதிரியாயிருத்தல்வேண்டும்; அவ்வாறில்லை. கனவின்கண் நமதுசிநேகிதனுடன் பேசினதாகக் கண்டோமானால் நனவில் அவன்பேசியதாக ஒப்புக்கொள்ளுகின்றானில்லை.

சொப்பனத்தைவிட்டு நாம் சாக்ரத்திற்கு வந்தபின் அச்சொப்பனவுலகமிருக்கின்றதா? இருக்கின்றதெனின் அங்குள்ளார் சுகதுக்கங்களை அநுபவிப்பது? இன்றெனின் அந்நந்தசத்தில் பல்லாயிரகோடி பிராணிகள் நாசமடையப்படவேண்டும். நாம் நினைத்தோறும் பல்லாயிரம் சொப்பனவுலகங்கள் பல்லாயிரங்கோடி ஆத்துமாக்களுக்காக சிருஷ்டிக்கப்படுகின்றனவா? நம்மொருவர் பொருட்டுச் சிருஷ்டிக்கப்படுகின்றனவா? பல்லாயிரங்கோடி ஆத்துமாக்களுக்கெனின் அவ்வாத்துமாக்கள் ஆங்கிருந்தனவாகச் சாக்ரத்தில் ஒப்பவில்லையாகலின் அஃதுண்மையன்று; நம்மொருவர்நிமித்தம் சிருஷ்டிக்கப்படுகின்றனவெனின் ஒருவர்க்காக க்ஷணத்துக்கு க்ஷணம் அளவற்றகோடி உலகங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றனவென்பது கூடாது; இந்தச் சாக்கிரவுலகம் அளவற்றகோடி ஆத்துமாக்களுக்காகச் சிருஷ்டிக்கப்படுகின்றமையாலென்க. அளவற்றகோடி ஆன்மாக்களுக்கிவ்வொரு உலகம் சிருஷ்டிக்கப்பட்டதென்பது நியாயமாகும்பொழுது, ஒவ்வொருவருயிருடைய ஒவ்வொருநாளிலும் பலமுறை காணும் சொப்பனவுலகங்கள் பித்தம் சந்நிபாதம் தோஷமுதலிய காலங்களில் காணும் உலகங்கள் இவைமுதலியவை ஒருவர்பொருட்டுச் சிருஷ்டிக்கப்படுகின்றனவென்று சொல்வது சரியாமா? சிருஷ்டிக்கப்படுகின்றனவாகக் கொள்ளினும் சுழுத்தி அவஸ்தையிலும் சாக்கிரத்திலும் மூர்ச்சை சமாதிகாலங்களிலும் அவை க்ஷணத்துக்கு க்ஷணம் அழிக்கப்படவேண்டுமன்றோ? சொப்பனமெய்யாயின் அதில் காணப்படும் கனவு சித்திரங்களாகவும் சத்துருக்களாகவும் இவ்விருதன்மையல்ல, அவர்களுடைய மனிதர்முதலிய சகல ஜீவராசிகளு மெய்யாதல்வேண்டும். மெய்யாகுங்கால் நாம் சுகதுக்கங்களிலொத்துண்டு அவர்கள் ஜாக்கிரத்தில் வந்துரைப்பதுபோல் நமது சொப்பனத்தில் காணப்பட்டவர்களும் வந்து கூறல்வேண்டும். கூறாமையால் அவர்கள் அசத்தாகின்றார்கள். இதனால் சொப்பனவுலகம் பிரமையினாலுண்டானதேயன்றிச் சத்துப்பொருளன்றென்பது திண்ணம். நாம் நாடகங்கள் பார்க்குமிடத்தும், காவியங்களைப் படிக்குமிடத்தும், கேட்குமிடத்தும், எழுதுமிடத்தும், சித்திரங்காரசதின் கண்ணும், மயக்க வஸ்துக்களை உட்கொண்டவிடத்தும், சங்கீதசாத்திரங்களும், அபூர்வமான சுகங்களைக்கேட்குமிடத்தும் ஜாக்கிரவுலகை மறந்து அவ்வவ்விஷயங்களையே நினைந்து சொப்பனம்போல அநுபவிக்கின்றோம். இவை மனத்தோற்றமேயன்றியுண்மையாமா? ஜாக்கிரத்தில் 50 வயசுள்ள மனிதனைக்கண்டு, நீ பிறந்து எத்தனை வருஷங்களாயின என்று வினவில அவன் 50 வருஷங்களென்றான்; அஃதுண்மையே. சொப்பனத்தில் அவனை வினவில் அங்கும் 50 வயசென்றே விடையளிப்பான். சொப்பனத்திலளித்த விடையுண்மையாமா? அப்போதுதான் தோன்றியவன் 50-வயசெனயாங்ஙன முரையாடலமையும்?

காரணமாய நூலும் ஜடம்; காரியமான ஆடையும் ஜடம் ஆதலால் நூலினின்றுமாடை தோன்றுவதுநியாயந்தான்; அவ்வாறு சித்தின்கண் சடமான பிரபஞ்சத்தோற்றம் எங்ஙனமமையும்? எனின் கூறுவாம்: சித்தின்கண் அவ்வாறான சடசத்தியிருந்தால் தோன்றும். ஜடமான பழுதையின்கண் பாம்பான சித்து தோன்றவில்லையா? சடமான கட்டையில் சித்தான மனிதன் தோன்றவில்லையா? அவ்வாறே சித்தினிடத்துச் சடமான உலகு தோன்றுகின்றது. சந்திரனில்லாப் பகற்காலத்தில் ஆகாயத்தில் சந்திரனிருப்பதாக எண்ணுவோமாயின் அவ்வாறே மனத்துக்கு அது விஷயமாகின்றது. தோற்றப்படும் சடமான சந்திரன் சித்தின்கண் தோன்றியிருந்து மறைகின்றது. விசேஷ பித்தங்கொண்ட மனிதனுக்கு வேறு உலகங் காணப்படுகின்றது. அவ்வுலக மறிவினிடமே உதித்ததென்று ஒத்துக்கொள்வோம். அவ்வுலகமோ சடம்; அதன் காரணமான அறிவோ சித்து. ஒருமனிதனுக்கு ஓர்வித வியாதிவந்தது; வந்ததுமுதல் அவனுக்குப்பின் ஒரு எருமைமாடுகூட வருவதாய்த் தோன்றிற்றும். அதற்குப்பலர் பல அவுஷதங்கள் தந்தும் தீராமல் முடிவில் ஓர் டாக்டர் அவுஷதங்கொடுத்துத் தீர்த்தாரென ஓர் பத்திரிகை சிலவாண்டுகளின் முன்னர் பேசியது. சிலநாட்களின்முன் ஓர் பைத்தியக்காரன் 'தூள்கொடு தூள்கொடு' என்றுமூலையில் யாரோ விருப்பதாகக் கேட்பதை நாம்பார்த்தோம். அவனுக்கு எதிரில் மனிதருய்தோற்றியே அவ்வாறு கேட்டான். தோற்றிய அம்மனிதனும் சரீரமான சடம், சித்தான பித்தன் அறிவினின்றுமே தோன்றிற்றென வுணர்தல்வேண்டும். "ஒருமனிதனுக்குச் சந்திரனிடத்தில் முயலும் பிறரது உருவமும் மாகப் பிரிக்கின்றது; அப்போது 'பூச்சி கடிக்கின்றது' 'பூச்சி கடிக்கின்றது' என்று பயந்து வலிகொண்டமை நாளது ஸ்தோத்திரமொருவருரைத்தார். இம்மாதிரி பல வட்டங்களிலும் காணுகின்றோம். இது யாதனாலமல்லவே. சடமித்தன பூச்சி, சித்தான அறிவினின்றுதிக்கவில்லையா? பூச்சியின் சரீரமான சடம், பித்தன் எடுத்துக்கொள்ளவேண்டிய வுவமானமாம். இதனால் கூறுவதிதாமெனின் சித்தினின்று சடமுண்டாகலாம்; சித்தினின்றுஞ் சடமுண்டாகலாம், காரணத்தில் அந்தந்தச் சத்திகளிருக்கின்றனவோ, அந்தந்தச்சத்திகள் வெளிப்படும்.

குனின்றும் சித்தேயுண்டாகவேண்டுமென்னும் நியமமில்லை. இங்ஙனமே மெய்த்தினின்றும் சொப்பன பிரபஞ்சமான சடம் தோன்றுகின்றது. மனந்திரிந்து உலகாயிற்றா? திரியாமலாயிற்றா? எனின் திரியாமலேயாயிற்று; கயிற்றினிடம் அரவும் கட்டையின்கண் கள்ளனும்போல. ஏனெனின் ஒருபொருளின்கண் மற்றொரு பொருள் விவர்த்தகாரியமாக விளங்குகின்றதோ! அது அசத்தேயாகும். விவர்த்தகாரியம் அசத்தாவதில் அதன்காரணமும் அசத்தாகவேண்டுமென்றுரைப்பது யுக்தி அநுபவங்கட்கு விரோதம். கயிற்றின்கண் விவர்த்தகாரியமாய அரவு பொய்யானால் கயிறும் பொய்யாமோ? சூரியன் கண்ணாடியில் பிரதிபலிப்பதுபோல் அறிவு சொப்பன சரீரத்திற் பிரதிபலிக்கின்றது என யாமுரைத்ததில் சூரியனும் கண்ணாடியும் பின்னமானமையின் பிரதிபலிக்கக்கூடுமென்றும், அறிவே உலகு என்றதில் அறிவுமுலகும் அபின்னமாயினமையின் பிரதிபலித்தல் அமையாதென்றும்; இஃது உவமானதோஷமென்றும் பிரதிவாதியாருரைக்கின்றனர். அதற்குச் சமாதானமுரைப்பாம்: அறிவின்கண் பின்னசக்தி, அபின்னசக்தியென இரண்டுசக்திகளுள்ளன. அவற்றில் பின்னசக்தியின் காரியமே சதனு சேதனமானவுலகம்; அபின்னசக்தியின் காரியம் நமது சரீராதி இந்திரிய அந்தக்கரணங்களாம். சொப்பனத்தில் அறிவினின்றும் உலகமுண்டாகின்றது; நமது சரீராதி அந்தக்கரணங்களுமுண்டாகின்றன. நமது சரீராதி அந்தக்கரணங்கள்தவிர அவ்வுலகிலுள்ள ஏனையவான்களும் பின்னசக்தியின் காரியமாயிருத்தலால் அவ்வான்கள் அநுபவிக்கின்ற சுகதுக்கங்கள், காரணமான அறிவிற்குத் தோன்றுவதில்லை; நமது சரீராதியந்தக்கரணங்கள் அபின்னசக்தியின் காரியமாயிருத்தலால் சொப்பனத்தில் நாமெடுக்கும் சரீரங்களுக்குவரும் சுகதுக்கங்கள் அவற்றினுக்குக் காரணமான ஷ அறிவிற்குத் தோன்றுகின்றன. சொப்பனத்திற் காணப்படும் ஏனைய பலசரீரங்கள் பின்னமாகத் தோற்றலின் சூரியன் பின்னமான கண்ணாடியில் பிரதிபலிப்பதுபோல் அறிவும் சரீரத்திற் பிரதிபிம்பிக்கின்றதென்றுரைத்தாம். (சரீரமென்பது சரீரத்தின்கணுள்ள அந்தக்கரணம்) காரணமான அறிவைத்தவிரப் பலசரீரங்களில் காணும் அறிவென்பது வேறில்லையெனத் தெரிவாறு பிரதிபிம்பிக்கிருக்கலாம் [illegible] ன்றி மற்றப் பயன்று. ஆயினும் அதற்கு விடையுமளித்தாம்.

கயிற்றின்கண் அரவு தோற்றமுண்டாவதுபோல் அறிவினிடத்து உலகம் தோற்றுகின்றதென்பதற்குப் பிரதிவாதியார் செய்யும் ஆக்ஷேபமாவது: கயிறு அரவு, அதைக்காணும் புருஷன் ஆகமூன்றிருப்பதுபோல் அறிவினிடமுலகு தோற்றுகின்றதென்றதில் அறிவுதானத்தில் கயிறும் [illegible] அரவு ஆகவில்லை யிருப்பனவன்றி, மூன்றாம் பொருளில்லாமையால் உவமானதோஷமென்பதாம். இதற்குச் சமாதானம்: பரவஸ்துவின்கண் உலகத்தோற்றமாத்திரமென்பதற்குக் கயிற்றினிடத்து அரவு உவமானமுரைத்தாம். இது சத்துப்பொருளில் அசத்துப்பொருள் தோற்றமாத்திரமென்பதுவரையில் உவமானம். கயிற்றின்தானத்தில் பரவஸ்துவும், அரவஸ்தானத்தில் சேதனு சேதனமான உலகமும் வைத்துக்கொண்டால் சங்கைதோன்றாது. சத்தான பரவஸ்துவின்கண் அசத்தன வல்லது சத்துப்போலியான சேதனுசேதனவுலகம் தோற்றுகின்றதென்பதற்கே கயிறு அரவு திருஷ்டாந்தம். உவமான மேகதேசமென்பது யாரும் அறிந்தவிஷயமே. இதற்கே சொப்பனவுக்கையில் காரணமான அறிவின்கண் காரியமான சேதனுசேதனவுலகம் தோற்றுகின்றதென்னு மவமானமக் கூறினும். அறிவுகாரணமும், உலகங்காரியமுமாயிருப்பனவன்றி அபேதமாயிருக்கின்றமையால் அறிவு பேதப்பட்டு உலகையறிதல் கூடாதெனச் சங்கைசெய்கின்றார் பிரதிவாதியார். அறிவின்கண்ணுள்ள பின்னசக்தியின் காரியவுலகமானமையால் வேறாகவே தோற்றுகின்றது; தோற்றுகின்றமையால் அவ்வாறு அறியவும் வருகின்றது. அறிவுக்கும் சத்திக்கும் அபின்னம்; சத்திக்கும் சத்தியின் காரியத்திற்கும் (பின்னமாகத் தோற்றினும்) அபின்னமே. சந்திரனிலவாய் ஆகாயத்துச் சந்திரபாவனை செய்ய பனத்திற்குச் சந்திரனைத் தோன்றுகின்றது. அச்சந்திரன் பனத்திற்குப் பேதமாய்த் தோற்றினும் அபேதமேயன்றோ? பித்தனுக்குஎதிரில் தோற்றும் பொருள்கள், அப்பித்தனுக்குப் பேதமாய்க் காணப்படினும், பேதமாகணரினும் அபேதமேயன்றோ? அங்ஙனமே அறிவிற்குச் சொப்பனவுலகு பேதமாயத் தோற்றினும் அவ்வாறுணரினும் அபேதமேயாம். எது பின்னசக்தியின் காரியமோ அது தோற்றமான அசத்து. அல்லது சத்துப்போலியேயாமன்றியாம்போதும் சத்தாகாதென்றுணர்க.

(இன்னும் வரும்.)

ஓர் நண்பன்

[illegible]

[illegible]

[100, மவுண்டு ரோட்டு.]

சென்னை காங்ரெஸ் கமிட்டி ஆபீஸ்.

ஐயா,— சென்ற டிசம்பர்மாசத்தில் "இந்தியன் நாஷனல காங்ரெஸ்" சபை கூடியபொழுது தற்கால சாந்தியாக அவர்கள் செய்த விதிகளின்படி சென்றவருஷத்து காங்ரெஸுக்கும் அதற்கு முன்கூடிய காங்ரெஸ் சபைகளுக்கு மிவ்விராஜதானியிலிருந்து பிரதிவாதிகளாகவந்த எல்லோரும் சேர்ந்து சென்னை ஸ்டாண்டிங் காங்ரெஸ் கமிட்டியாகிறார்கள். காங்ரெஸ் சபைக்கு வாராதவர்களிலும் அதுவிஷயத்தில் அனுதாபமுற்று அங்கங்கே சிரேஷ்ட புருஷர்களாயுள்ள கனவான்களை இந்த ஸ்டாண்டிங் கமிட்டிக்கு மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளவும் விதிகள் இடங்கொடுத்திருக்கின்றன. அந்தப்படி இச்சென்னையிலுள்ள காங்ரெஸ் பிரதிநிதிகளெல்லாம் சென்ற ஜனவரி-மீ உச-உ பதினம்கூடி ஒரு காரியநிர்வாகசபை நியமித்தார்கள். அக்காரிய நிர்வாகசபையின் காரியதரிசிகள் காங்ரெஸ் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் பற்றி அங்கங்கே வெளிகளில நியமிக்கப்படும் பலகமிட்டிகளோடும் கடிதப்போக்குவரத்து வைத்துக்கொள்வார்கள்.

உ. இச்சென்னைக்கு வெளியிலுள்ள எல்லாப் பிரதிநிதிகளும் சென்னைக் காங்ரெஸ் கமிட்டியைச்சேர்ந்த மெம்பர்களேயாதலால், இவர்களெல்லோரும் இப்பொழுது ஒருகாரியஞ்செய்யவேண்டும். ஒவ்வொருஜில்லா பட்டணத்திலுமுள்ள பிரதிநிதிகள் காலதாமதமின்றி உடனே இனி ஒரு மீட்டிங்கு கூடவேண்டும். கூடி ஒருசிறிய காரியநிர்வாகசபையை ஏற்படுத்தவேணும்; சென்னையிலேற்பட்டுள்ள சேன்ட்ரல் கமிட்டியோடு கடிதப்போக்குவரவு செய்துவருவதற்காக அங்கங்குள்ள கமிட்டிகளுக்கு ஒரு செகிரிடெரியும் நியமிக்கவேண்டும். சென்னைக்குவெளியில் ஜில்லா பட்டணங்களில் நியமிக்கப்படும பல கமிட்டிகளுக்கு டிஸ்திரிக்ட்டு கமிட்டிகள் எனப்பெயர்கொடுக்கப்படும். இக கமிட்டிமெம்பர்கள் தங்களுடன் இன்னும் வேண்டியவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

ந. இந்த டிஸ்திரிக்ட்டு கமிட்டியார், அவர்கள் ஜில்லாவில் உள்ள முக்கிய பட்டணங்களிலும் சப் கமிட்டிகளை ஏற்படுத்தி அவ்வவ்விடங்களிலுள்ள ஜனங்களுக்கு காங்ரெஸ் விஷயங்களைப்பற்றி போதித்துவரவேணும். காங்ரெஸ் சபையின் நோக்கங்களை இவ்விராஜதானியில் விர்த்திசெய்து வருவதற்கு அங்கங்கு இவ்விதமான ஒழுங்குபட்ட ஏற்பாடு ஒன்று நமக்குள்ளிருக்கவேண்டியது அத்தியாவசிகம். ஏனெனில, ஒழுங்கின்றியும், விதிகளில்லாமலும் எவ்வேலையும் கிரமமாக நடக்காது.

ச. சென்னையிலேற்பட்டுள்ள காரியநிர்வாகசபையார் செய்யவேண்டிய அதி முக்கியமான வேலை யென்னவென்றால், காங்ரெசுக்குப்பிரதிநிதிகள் நியமிப்பதற்காக இவ்விராஜதானியைப்பல டிவிஷன்களாகப் பிரித்து, ஒவ்வொருடிவிஷனும் கட்டுப்பாட்டுக்குட்பட்டு உறம் பெறும்படி செய்வதேயாம். இதற்காக இப்பொழுது இவ்விராஜதானிமுழுமையும் சம டிவிஷன்களாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றன. முதலில் இந்த ஒவ்வொருடிவிஷனிலும் ஒரு டிஸ்திரிக்ட்டு கமிட்டி ஏற்படுத்தி அக்கமிட்டியாருடன் சென்னைக்கமிட்டியார் கடிதப்போக்குவரவு வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு, அந்தக்கமிட்டிகள் ஒவ்வொன்றுக்கும் அந்தந்த டிவிஷனைப்பற்றியுள்ள பொறுப்புகள் இன்னவையென்று அவர்கள் அறியவேணும். இப்பொழுது ஒவ்வொரு டிஸ்திரிக்ட்டு கமிட்டியாரும் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள் எவையெனில்;—

(க) ஜனங்களுக்கு காங்ரெஸ் விஷயங்களைப்பற்றிப் போதித்தல்; (உ) அச் சபைக்கு பிரதிநிதிகளை நியமித்தல்; (ந) அச்சபைக்குவேண்டிய நிதியைச் சேர்த்தல்.

முதலாவது, ஜனங்களுக்கு காங்கிரேஸ் விஷயங்களை எடுத்து போதித்தல். இந்தவேலையை அங்கங்குள்ள டிஸ்திரிக்ட்டு கமிட்டியார் உடனே மேற்போட்டுக்கொள்ளவேண்டும். அங்கங்குள்ள கமிட்டியார் இதுவிஷயத்தில் அதிக முழுமுரமாய் பிரயாசை எடுத்துக்கொண்டு வேலை நடத்திவரவேண்டும். இக்கமிட்டிகளின மெம்பர்கள் அந்தந்த டிவிஷனிலுள்ள கணிசமான எல்லாக்குடிகளும், நல்லநாக டைக்காரர்களும கூட அவர்களுக்கு இச் சகாயமாயிருக்கும்படி அவர்களுடைய ஒத்தாசையைத் தேடிக்கொள்ளவேண்டும். தற்காலத்தில முக்கியமாயுள்ள இராஜாங்க சம்பந்தமான விஷயங்களைப்பற்றி அவர்களுக்கு ஒருவிதமான அபிப்பிராய முண்டாகும்படி அங்கங்குள்ள கமிட்டி மெம்பர்கள் செய்யவேண்டும். இத்தேசத்து மகாஜனங்களின சுவய நலார்த்தமாகவே நாஷனல் காங்கிரஸ் சபை இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டு வருஷா வருஷம் கூடிவருவதால் அதைப் பணத்தாலும், தேகப்பிரயாசையாலும் ஆதரித்து வரவேண்டிய கடமை அவர்களுடையதென்று இத்தேசத்தார் அறியும்படி செய்யவேண்டியது கமிட்டியார்களைச்சார்ந்த பொறுப்பேயாம்.

மேற்சொல்லிய விஷயங்களைப்பற்றி எளிய நடையில் சுலபமாயெழுதப்பட்ட சிறு புத்தகங்களை எங்கும் பரவச்செய்யவேண்டும். அதுவுமன்றி, ஒவ்வொரு டிவிஷனிலுமுள்ள மெம்பர்கள் ஊருக்கு ஊர் சென்று காங்கிரெஸ் விஷயங்களை எடுத்து பிரசங்கங்கள் செய்துவரவேண்டும். சிறுபுத்தகங்கள் வேண்டியதற்கு சுலபமான எளியநடையில் எழுதப்பட்ட காங்ரெஸ் வினாவிடைகளை கமிட்டியார் விலைக்கு வாங்கி அவர்களிலாகாமுழுமையு மிறைக்கவேண்டும். ஒவ்வொரு டிஸ்திரிக்ட்டு கமிட்டியாரும் அவரவர்களுடைய டிவிஷனுக்கு வேண்டிய க,000- அல்லது உ,000 காபிகளைச் சென்னையிலுள்ள சென்ட்ரல் கமிட்டியாரிடத்திலிருந்து விலைக்குப் பெறவேணும், மேலும் ஹிந்து பத்திராதிபராகிய க- சுப்பிரமணியஐயரால் செய்யப்பட்ட ஆரியஜனஐக்கியம் அல்லது காங்கிரெஸ் ஜனசபை என்ற சிறிய புத்தகமும அங்கங்குள்ள கமிட்டியார் விலைக்குவாங்கி ஜனங்களுக்குக் கொடுக்கவேண்டும். அதின் விலை இரண்டே அணவாம். ஒவ்வொரு டிஸதிரிக்ட்டு கமிட்டியாரும் ஜில்லாவின் பலபாகங்களிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்தும் அங்கங்கே காங்ரெசைப்பற்றிப் பிரசங்கங்கள் செய்துவரத்தக்க மனிதர்களை ஏற்படுத்தவேண்டியது மிக விரும்பத்தக்கதாயிருக்கிறது. காங்ரெஸ் சபையின் நோக்கத்தை விர்த்திசெய்து முன்னுக்குக்கொண்டுவர அவசியமான யாவத் முயற்சிகளையும் அவர்கள்செயதுவரவேண்டும்.

இரண்டாவது, காங்ரேஸ் சபைக்கு பிரதிநிதிகள் நியமனவிஷயம். அங்கங்குள்ள கமிட்டி மெம்பர்களின் முதல் மேற்படிவிஷயமாகவேண்டிய பிரயத்தனஞ்செய்யவேண்டும். (வரும்)

[illegible]

[illegible]	,,	க	,,
[illegible]	,,	க	,,
[illegible]	உ	,,	,,
[illegible]	,,	கஉ	,,
[illegible]	,,	அ	,,
[illegible]	,,	ச	,,
Bible Dissector (English)	0	0	6
One Hunured anb Fifty Contradictions cf the Bible (English)	0	1	0

ப்ரம்மவித்தியா யந்திரசாலையில் விற்கப்படும் தமிழ்புத்தக

விளம்பரம்

கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு,
இஃது ஓர் சம்ஸ்கிருத பண்டிதரால் எழுதப்பட்டது.
விலை அணா 2.

நீதிக்கீர்த்தனை	,,	க	சூ
ஆன்மாவும் சரீரமும்	,,	க	,,
இஃது நாஸ்திகர் கேழ்விக்கு விடை			
சன்மார்க்கபோதனி	,,	,,	௩
சீகாழித்தலபுராணம்	,,	அ	,,
வேளூர்புராணம்	,,	சா	,,
சந்தபுராணநவநீதம்	,,	சஉ	,,
பஞ்சதசோபநிஷத்து	க	உ	,,
அஷ்டாங்கயோகம	,,	ரு	,,
மனுமுறைகண்டவாசகம்	,,	ச	,,
கிறிஸ்துமதகண்டனம்	,,	க	,,
சிவனுந்தேவனுஎன்னுந்திரு நாவுக்காப்பு	,,	,,	,,
யேசுக்கிறிஸ்து மனிதனே	,,	,,	சா
நீதிநெறிவிளக்கவுரை	,,	ச	,,
சிவோத்கருஷதீபிகை	க	,,	,,

திருமுருகாற்றுப்படை பரிமேலழகருரையுடன்	,,	உ	,,
திருத்தணிகைபற்றுபபத்தந்தாதி	,,	க	,,
சதாசிவரூபம்	,,	உ	,,
நெஞ்சுவிடுதூது	,,	,,	சா
உருத்திராக்கமாலை	,,	,,	சா
சகாதேவசாஸ்த்திரம்	,,	க	,,

விவேகசுந்தரம்.

நெ. க- உ- ௩- ச- ரு- சா எ- அ
பிரதி ஒவ்வொன்றுக்கு விலை பை மூன்று

விவேசபோதனி

நே. க. உ. ௩. ச. ரு. சா. பிரதி 1. க்கு விலை பை மூன்று

கல்விக்களஞ்சியம் கடன்பட்டகந்தன்கதை	பை		மூன்று
புருஷதுவேஷபூதகிகதை	பை		ஆறு
திருஞானசம்பந்தசுவாமிகள்சரித்திரம்	0	0	3
சுந்தரமூர்த்திசுவாமிகள் சரித்திரம்	0	0	3
இந்துஜெயபேரிகை பிரதிஒன்றுக்கு விலை	0	o	3
ஜமீன்தாரம்	,,	க	,,
வச்சாடங்கம்	,,	,,	௱
வியாதிமூலங்கள்	,,	,,	௱
	,,	,,	௱

ஒருபைபுத்தகங்கள்.

சத்துருசகவாசம்நித்தியசங்கடம்
நன்மை நலந்தரும்
பேராசை பெருநஷ்டம்
அடாதுசெய்தோன் படாதுபடுவன்
மனக்கவலைபலக்குறைச்சல்
குணபூஷணிசரித்திரம்
பாதிரிமார்ஸ்கூலில் பெண்களைஅனுப்பலாமா

அறிவிப்பு

சர்வதாரிவருஷத்து
ரிப்பன் தமிழ்ப்பாக்கெட்
பஞ்சாங்கம்-
தயாராயிருக்கிறது.

புத்தகம் 1-இ விலை அணா 6. தபால்பாகிங்சார்ஜ் அ 1. 10இ ஒனறும் 25 இ 3. ம் 50 இ 7. ம் 10 15 ம். அதிகமாகக்கொடுக்கப்படும்.

இங்ஙனம்
சை இரத்தினசெட்டியார்.
புரோப்ரயிட்டர்
மதராஸ் ரிப்பன் பிரெஸ்
316. தம்புசெட்டிவீதி
சென்னை.

CHIDAMBARAM:—Printed and Published for the Proprietor at the Brahmavida Press.

ப்ரஹ்மவித்யா.

{ ௩. புத்தகம் }
பத்திரா கிரயம்
1 வருஷ 2—12—0
6 மீ 1—8—0
3 மீ 0—14—0
1 காபி- 0—2—6
இலங்கைக்கு, 3—8—0.
{ VOL-3 }

ப்ரம்மவித்தியாபத்திரிகை.
மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்

{ இலக்கம்-௬ }
பத்திரிகா கிரயத்தை மணியார்டராகவாவது, ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.
{ NO. 6 }

[illegible]

சிதம்பரம்:— கஅஅஅ௵ செப்டெம்பர்௴ கருஉஇ சர்வதாரி௵ புரட்டாசி௴ உ௨

வசித்ராயுபனம்

[[illegible]]

[illegible]

சரித்திரப் பயிற்சி.

(முன் தொடர்ச்சி)

இந்த விக்கிரமாதித்தன் ஆந்திரவம்சத்தில் பிறந்தவன்; அக்கினிகுல அரசர்களுக்கெல்லாம் முதன்மையானவனென்று மகா கவிகளாலும், புராணக்காரர்களாலும பிரபந்தங்களிற் புகழப்பட்ட அரசனாயிருந்தான். அக்கினிகுலத்திலுண்டான மன்னர் பணிகளோவென்றால்! கீர்த்திமான்களாயும், எனைய தேசத்தவர்களால் பெரிய காரியங்களைச் செய்பவர்களென்று அடிக்கடி புகழப்பெற்றவர்களாயும், பௌத்தமதமென்கிற துஷ்டமிருகத்தைத் துரத்தக்காரணமானவர்களாயும், பிராமண மதமென்கிற மண்டபத்தைத் தாங்கு ஸ்தம்பங்கள் போன்றவர்களாயும் ஆண்டுவந்தார்கள். அக்கினிவம்சமென்றால் என்ன? அது எந்ததேசத்திலிருந்தது? எதற்காக அவர்கள் பரதகண்டத்தவர்களால் புகழப்பெற்றவர்களானார்கள்? பௌத்த மதமென்றால் கிறிஸ்துமதமா? யவநமதமா? அல்லது துருக்கமதமா? இவைபோன்ற கேழ்வைகளுக்கு எம்மாலானமட்டும் உத்தரம் சொல்லப்புகுவாம்.

கலியுகமுண்டானகாலத்தில் மனுவினால் ஏற்படுத்தப்பட்டமாதிரியாகவே நான்குஜாதியாரும் நெறிதவறாமல்நடந்து தங்கள் தங்கள் கருமங்களை ஆசரிப்பதில் கவனமுள்ளவர்களாயிருந்தார்களென்று முன்னரே சொல்லப்பட்டிருக்கின்றது. அப்பொழுது பரதக்கண்டத்தவர்கள் படித்தல், படிப்பித்தல், யாகஞ்செய்தல், போகம் முடித்தலென்னும் முதற்சாதியாரின் கருமங்களிலும், ஆளுதல், தண்டித்தல், யாகஞ் செய்வித்தல், க